பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 25 வியாழக்கிழமை 11.11.2021 கதிர் 06

**இனிது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு அமெரிக்க செல்கின்றமையை ஒட்டி தமிழ் அரசியல் பரப்பில் பலத்த விமர்சனங்கள், சத்தங்கள் கிளப்பப்படுகின்றன.

ஆனால், இந்த அமெரிக்கப் பயணம் மிக மிக பக்கம்02

# போராட்டங்களால் நாடு மீண்டும் முடக்கப்படலாம்!

## அலரிமாளிகை நிகழ்வில் கோட்டாபய எச்சரிக்கை



நாட்டின் எதிர்காலத்துக்காக சரியானவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை விடுத்து, அனைத்துக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் எதிர்க்கட்சியினரின் செயற்பாடு கவலையளிக்கின்றது. போராட்டங்களால் மீண்டும் கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நாட்டை மீண்டும் ஒரு முறை முடக்க நேரிடலாம்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய விஞ்ஞான தினம் மற்றும் விஞ்ஞான வாரத்தை முன்னிட்டு அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடு திறக்கப்பட்டு புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் அனைத்துச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், 2

## தொற்று 693 உயிரிழப்பு 16

இலங்கையில் நேற்று 693 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 47 ஆயிரத்து 346 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 333 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 22 ஆயிரத்து 517 ஆக அதிகரித்துள்ளது. 2

# புதிய அரசமைப்பு வரைவு இந்த வருட இறுதிக்குள்

## அநுரவின் கேள்விக்கு மஹிந்த பதில்



இலங்கையில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு இந்த வருட இறுதிக்குள் இறுதி வரைவை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 2

## இங்கு போர்க்குற்றம் இழைத்த சகலரும் சர்வதேசத்துக்குப் பதிலளிக்க வேண்டும்

### மாமனிதர் ரவிராஜ் நினைவேந்தலில் மாவை வலியுறுத்து



இலங்கையில் போர்க்குற்றம் இழைத்தவர்கள், கொலைகளில் ஈடுபட்டவர்கள் சர்வதேசத்துக்குப் பதில் சொல்லும் கடப்பாட்டை ஏற்று பதில் சொல்லியே ஆகவேண்டும்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

கொழும்பில் ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் 2

## ஆசிரியரின் சம்பள முரண்பாட்டை ஜனவரிக்குள் தீர்க்க அரசு உறுதி



அதிபர் – ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு 2022 வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக ஜனவரி மாதத்துக்குள் தீர்வு வழங்க நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஒப்புக்கொண்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அரச 11

## வடக்கில் பாடசாலைகள் இன்று இயங்கும்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட பாடசாலைகள் இன்று இயங்கும் என்று மாகாண கல்வி அமைச்சின் 2

# வடக்கு - கிழக்கில் சிங்களமயமாக்கல்

### சுவிஸ் தூதுவர் குழுவினரிடம் அரசின் அராஜகங்களை ஆயர்கள் சுட்டிக்காட்டு



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் அபிவிருத்திப்பணிகள் புறக்கணிப்பட்டு 11

## சீரற்ற காலநிலையால் 25 பேர் பரிதாப மரணம்

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் கடந்த ஒக்டோபர் 29 ஆம் திகதி முதல் நேற்று மாலை 5.30 வரை, 25 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தங்களால் மேலும் 7 பேர் காயமடைந்துள்ளமையுடன், ஒருவர் காணாமல் போயுள்ளார்.

அத்துடன், 17 மாவட்டங்களுக்குட்பட்ட 145 பிரதேச செயலகங்களில் உள்ள 60 ஆயிரத்து 264 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 11

### 'ஒரே நாடு – ஒரே சட்டம்'

## செயலணிக்கு 3 தமிழர்கள் நியமனம்

'ஒரே நாடு – ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணிக்கு மூன்று தமிழர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனம் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் 2

### நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்ட

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்திடல் நாளை திறப்பு

(இ.கலையமுதன்)

நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 11



## குடாநாட்டில் 33,823 பேர் பாதிப்பு

(இ.கலையமுதன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக நேற்று மாலை வரை 11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முக்கியமானது, தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தை அதிக கவலையில் ஆழ்த்தும் விடயம் இது என்று தென்னிலங்கையின் மூத்த அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்தார்.

யுத்தம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. இந்தக் கால கட்டத்தில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகவும், தமிழர்களின் அபிலாஷைகள் சம்பந்தமாகவும் பல மட்டங்களில் அமெரிக்கா கரிசனையும் கவலையும் காட்டி வந்துள்ளது. பெரும்பாலும் யுத்தத்தை ஒட்டிய விடயங்களில் பொறுப்புக் கூறல் பற்றியே அமெரிக்கா அதிகம் பேசி வந்திருக்கின்றது. அவ்விடயத்தை ஒட்டி மீள நிகழாமையை உறுதிப்படுத்துவது பற்றி அமெரிக்கா பேசி வந்தாலும் – தேசிய இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதே மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கான ஒரே மார்க்கம் என்று அமெரிக்கா கூறிவந்தாலும் – இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்படுவது மிக மிக அவசியம் என அமெரிக்கா வலியுறுத்தி நின்றாலும் – தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு இப்படித்தான் அமைய வேண்டும் என்ற எந்த வலியுறுத்தலையும் அமெரிக்கா இடைத்தரகராக நடுவில் முன்வைக்க இதுவரை வரவேயில்லை என்பதை அந்த அரசியல் விமர்சகர் சுட்டுகின்றார்.

"இவ்வளவு காலமும் இரு தரப்புகளுக்கும் இடையில் (தமிழர்களுக்கும் இலங்கை ஆட்சிப் பீடத்துக்கும் இடையில்) இந்த விடயங்களை (தீர்வு விவகாரங்களை) கையாள்வது இந்தியாவின் வேலை என்று கருதி அமெரிக்கா ஒதுங்கிப் பார்வையாளராக இருந்து வந்தது. இப்போது இந்தியாவுடன் சேர்ந்து அவ்விடயத்தைத் தானும் கையாள அமெரிக்கா முன்வந்திருப்பது முக்கிய அம்சம். அதுவும் புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து இலங்கை அரசு ஆயத்தமாகும் சமயத்தில் அது குறித்து தமிழர் தரப்பின் அபிலாஷைகள், சட்ட நிலைமைகள் பற்றிய சில தீர்மானங்களை எடுக்க அமெரிக்கா விரும்புகின்றது. ஒவ்வொன்றும் தனித்தனியாக ஒவ்வொரு தேசமாக விளங்கக் கூடிய ஐம்பது மாநிலங்களை சமஷ்டி முறைமையின் கீழ் வெற்றிகரமாக – வெளிப்படையாக – இணைத்து ஒரு நாடாக வைத்திருப்பதன் மூலம் உலகுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறது அமெரிக்கா. சமஷ்டி முறைதான் ஐக்கியத்துக்கு மிகச் சிறந்த வழி என்பதை 232 ஆண்டுகள் தாண்டியும் உலகுக்கு உதாரணமாக நிரூபித்து நிற்கும் அமெரிக்காவிடம், சமஷ்டி பிரிவினைக்கு வழி வகுக்கும் என்ற தென்னிலங்கைக் கதை எடுபடாது என்பது தென்னிலங்கைத் தலைவர்களுக்கும் தெரியும்." – என்றார் அவர்.

"அமெரிக்காவுக்கு எதிராக நிற்பவர்கள் போல காட்டிக்கொண்ட நமது ஆட்சியாளர்கள், தமது இடதுசாரி மற்றும் பேரினவாதப் பங்காளிக் கட்சிகளையும் பகைத்துக் கொண்டு, யுகதனவி மின் உற்பத்தி நிலையப் பங்குகளை சத்தம் சந்தடியின்றி – காதோடு காது வைத்தால் போல – அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றிக் கொடுக்கவில்லையா? அது போல புதிய அரசமைப்பு உருவாக்கத்திலும் பல விடயங்களைத் தங்களதும், தங்களது மேற்படி பங்காளிக் கட்சிகளினதும் விருப்பையும் மீறி, அமெரிக்க அழுத்தத்துக்காகச் சேர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு அரசுத் தரப்பு உள்ளாகும் என்பதுதான் என் கணிப்பு. இவ்விடயத்தில் புதிதாக ஏற்பட்டிருக்கும் அமெரிக்க ஈடுபாடு அதற்குத்தான் வழி சமைக்கும் என எனக்குத் தோன்றுகின்றது. ஆகையினால் அமெரிக்கப் பங்களிப்பு என்ற இந்தப் புதிய நகர்வை, தமிழர் தரப்பு வேறுபாடுகளை மறந்து, ஒற்றுமைப்பட்டுக் கையாண்டு, அதிகம் ஈட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும்." – என்றார் அந்த விமர்சகர்.

இந்த முக்கியத்துவத்தை உணர்ந்துதான் என்னவோ, தமிழ்க் கூட்டமைப்பின் மூன்று சட்ட நிபுணர்கள் அடங்கிய குழு அமெரிக்கா செல்கின்றமையை, தமது அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், யாழ். மாவட்ட எம்.பியுமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் வரவேற்கின்றார் என்று நான் நினைக்கிறேன்.

நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய ஒரு நியாயமான தீர்வு தமிழர்களுக்குக் கிட்ட வேண்டும் என்றால் இவ்விடயத்தில் நேரடி சர்வதேசப் பங்களிப்பு மிக மிக அவசியம் என்று சுட்டும் விக்னேஸ்வரன், அந்தப் பின்புலத்தில் அமெரிக்கப் பங்குபற்றலை தமிழர்கள் வசமாகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்றும் கோடி காட்டுகின்றார். அதனைத் தமிழ் அரசியல் தலைவர்கள் சரிவர உள்வாங்கிக் கொள்வர் என்றால், இந்த விடயத்திலாவது அற்ப அரசியல் ஆதாயங்கள், சுயநலங்கள் கடந்து ஒன்றுபட்டு நிற்பர் என்று நம்பலாம்.

ஆனாலும், நமது தமிழ் அரசியல் தலைவர்கள் நண்டுகளுக்கு ஒத்தவர்கள் என்ற எண்ணம்தான் இந்த நம்பிக்கைக்குக் குறுக்காக வந்து நிற்கின்றது.

பார்ப்போம்! என்ன செய்யப் போகின்றார்கள் என்று...!

★ ★ ★

மக்கள் போராட்டத்துக்காக எதிர்க்கட்சிகள் பொதுமக்களைத் திரட்டுவது கொவிட் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முரணானது என்று சீறுகின்றார் நாட்டின் அதி உத்தமர்.

கந்த சஷ்டிக்குக் கூட கோவில்களுக்குள் ஐம்பது பேர் ஒரே சமயத்தில் நுழைய விடுகின்றார்கள் இல்லை.

ஆனால், இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் மீறி வேறு சிலர் தம்பாட்டில் கூட்டங்கள், கொண்டாட்டங்களை நடத்துகின்றார்கள். இந்தச் சமயத்தில் இவை எல்லாம் தேவைதானா என்ற வினாதான் எழுகின்றது.

தேசிய இளைஞர்கள் சேவைகள் கவுன்ஸில் இந்தச் சமயத்தில் பல்வேறு



மாகாண விளையாட்டு அணிகளையும் வடக்குக்குக் கூட்டி வந்து இங்கு தனது விளையாட்டுப் போட்டிகளை நடத்துகின்றது. அதனால் பல மாகாணத்தவர்களும் இங்கு தேவையின்றிக் கூடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வலைப்பந்தாட்டம், வேறு சில மைதானங்களில் உதைபந்தாட்டம், எல்லே என்று ஏற்பாடு. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தலா மூன்று அணி என்றால் ஒரே சமயத்தில் முப்பது மேற்பட்ட அணிகளை வடக்கே கூட்டி வரும் ஒழுங்கு. கடவுள் செயலால் மழை வெள்ளத்தினால் சுற்றுப்போட்டி ஆட்டங்களை இங்கு நடத்துவதில் இக்கட்டு. என்ன செய்யப் போகின்றார்களோ தெரியவில்லை.

ஆனால் வலைப்பந்தாட்டம் மட்டும், மழை வெள்ளத்தை அடுத்து கிளிநொச்சியில் உள்ளக அரங்குக்கு மாற்றப்பட்டு அங்கு நடக்கின்றது. நேற்று முன்தினம் நடந்த ஓர் ஆட்டத்தின் படம் இணைத்துள்ளேன்.

கோவிலுக்குள் ஒரே சமயத்தில் ஐம்பது பேர் நுழையக் கட்டுப்பாடு. அந்தக் கட்டுப்பாடு உள்ளக அரங்குகளில் விளையாட்டுகளுக்கு இல்லையா?

சுகாதார அதிகாரிகள்தான் பதிலளிக்க வேண்டும்.

– மின்னல் –

---

## இங்கு போர்க்குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சாவகச்சேரியில் ரவிராஜின் உருவச்சிலை அமைந்துள்ள நினைவு சதுக்கத்தில் நேற்று நடைபெற்றது.

நகர சபை உறுப்பினர் ஞா.கிஷோர் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜை இழந்து 15ஆண்டுகள் ஆகிவிட்டாலும் எல்லோர் நெஞ்சிலும் அவரது அர்ப்பணம் நிறைந்து நிற்கின்றது. அந்த நாள்களில் ரவிராஜ் மூன்று மொழிகளிலும் அறிவும் ஆற்றலும் கொண்டவராக விளங்கினார்.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக, விடுதலை எங்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக சர்வதேசத்துக்கு முன்னால், கொழும்பில் மனித உரிமைகள் நிலையத்துக்கு முன்பாக, சிங்கள ஒலிபரப்புக்களில், சிங்கள மக்கள் மத்தியில் எங்கள் இனத்தின் விடுதலைக்கான தேவைப்பாட்டை வலியுறுத்தி தீவிர பிரசாரத்தில் அவர் ஈடுபட்டிருந்தார்.

அப்போது அவர் தனது சட்டத்தரணி தொழிலை ஆற்றுவதற்காக நீதிமன்றம் செல்லும் வழியில் வழிமறிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். அந்தக் கொலைக்கு அப்போது இருந்த அரசுதான் பொறுப்புக் கூற வேண்டி இருந்தது. இப்போதும் அதற்காகப் பொறுப்புக் கூற வேண்டும்.

ரவிராஜ் மட்டுமல்லாமல் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள், பொதுமக்கள் என போரில் மட்டுமல்ல அரசின் உளவுத்துறையினரால், அவர்களுடைய ஆட்களால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களது எண்ணிக்கை எண்ணில் அடங்காது.

ரவிராஜின் நினைவு நாளில் அவர் மீது அன்பு பற்றுக் கொண்டவர்கள், இலட்சிய தாகம் கொண்டவர்கள் கூடி அஞ்சலி செலுத்தும்போது அவருடைய அர்ப்பணம், தியாகம் நினைவுகூரப்படுவது மட்டுமல்லாது அவர் ஆற்றிய தியாகத்தை, கடமை கண்ணியக் கட்டுப்பாட்டைப் பின்பற்றி எங்கள் இனத்தின் விடுதலைக்காக உழைக்க வேண்டும். அதுவே நாம் அவருக்குச் செய்யும் அர்ப்பணம் – என்றார்.

---

## செயலணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இராமலிங்கம் சக்கரவர்த்தி கருணாகரன், யாழ். மாநகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் ஐயம்பிள்ளை தயானந்த ராஜா ஆகியோருக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

11 உறுப்பினர்களைக் கொண்ட 'ஒரே நாடு – ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியில் தமிழர்கள் எவரும் உள்ளடக்கப்படாமை தொடர்பில் கடந்த சில நாட்களாகப் பல தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்திருந்த நிலையிலேயே குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

## தொற்று 693...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, நாட்டில் மேலும் 16 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 908 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 16 சாவுகளில் 8 பெண்களும், 8 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

---

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் நில வும் சீரற்ற காலநிலையால் மூன்று மாவட்டங்களும் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் முன்வைத்த பரிந்துரைக்கமைய வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியுடன் நேற்று பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.

எனினும், மூன்று மாவட்டங்களிலும் காலநிலை சீராகி வருகின்றது என மாவட்டங்களின் செயலாளர்கள் அறிவித்துள்ளனர்.

அதனால் மீள ஆரம்பிக்கப்பட்ட தரங்களுக்கான பாடசாலை கல்வி நடவடிக்கைகள் இன்று இடம்பெறும் என்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய அரசியலமைப்புக்கான வேலைத் திட்டங்கள் தற்போது இறுதிக் கட்டத்தில் இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின்போது ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பியால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசு தனது கொள்கை அறிக்கையில் உறுதியளித்தபடி புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழு இவ்வருட இறுதிக்குள் தனது இறுதி வரைவைச் சமர்ப்பிக்கும்.

ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, ஜனாதிபதி சட்டத்தரணி நவீன் மாரப்பன, பேராசிரியர் நசீமா கமர்தீன், கலாநிதி ஏ. சர்வேஸ்வரன் மற்றும் பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ் அடங்குகின்றனர் – என்றார்.

---

## போராட்டங்களால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டங்கள், ஊர்வலங்கள் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் காரணமாக மீண்டும் கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நாட்டை மீண்டும் ஒரு முறை முடக்க நேரிடலாம்.

இதனால், பொதுமக்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும்.

ஐந்து வருடகால ஆட்சியின்போது ஏற்பட்ட தோல்விகள் மற்றும் பலவீனங்கள் காரணமாகவே, அவர்களுக்குப் பதிலாகத் என்னை மக்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர்.

இருப்பினும், முன்னதாக அதிகாரத்தில் இருந்திருக்காதவர்கள் போல் எதிர்க்கட்சியினர் தற்போது செயற்படுவது கவலையளிக்கின்றது. இந்த முறைமையை மாற்றுவது எதிர் காலத்துக்கான தற்காலத் தேவையாக உள்ளது.

தற்கால உலகின் அனைத்துத் துறைகளிலும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் ஆளுகை காணப்படுகின்றது.

புதிய தொழில்நுட்ப அறிவின்றி எமது எதிர்காலச் சந்ததியினர் இந்த உலகத்துடன் முன்னோக்கிச் செல்ல முடியாது.

அதனைப் புரிந்துகொண்டு, புதிய தொழல்நுட்பத்துடன் கூடிய எதிர்காலச் சந்ததியினருக்காக, கல்வியில் உடனடியாக மாற்றம் ஏற்படுத்த வேண்டியது அவசியம் – என்றார்.

**தவறவிடப்பட்டது**

PF- 2786 வாகனத்தின் முன்பக்க இலக்கத்தகடு (9.11.2021) அன்று முதல் யாழ்ப்பாணப் பிரதேசத்துக் குள் தவறவிடபட்டுள்ளது.

- கண்டு எடுத்தவர்கள் இவ் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

10 முருகேசர்லேன் நல்லூர் 0777222524

# நாவலப்பிட்டி - ஹப்புகஸ்தலாவ பிரதான வீதியில் பாரிய மண்சரிவு!



நாவலப்பிட்டி – ஹப்புகஸ்தலாவ பிரதான வீதியில் ருவான்புர பகுதியில் நேற்று (புதன்கிழமை) பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அந்த வீதி ஊடான போக்குவரத்து முற்றாக முடங்கியது.

இப்பகுதியில் மண்சரிவு ஏற்பட்டு மேலும் சில சரிவுகள் சரியக்கூடிய அபாயம் இருக்கின்றமையால் ஆய்வுப் பணிகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மண்சரிவை அகற்றி இயல்பு நிலை திரும்பும் வரை நாவலப்பிட்டியிலிருந்து ஹப்புகஸ்தலாவ மற்றும் கொத்மலை, பூண்டுலோயா, திஸ்பனை ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் பயணிகள் மாற்று வழியை பயன்படுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தம்பிலுவில்லில் விபத்து 29 வயது இளைஞன் சாவு

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் பிரதான வீதியில் கடந்த திங்கள் நள்ளிரவு இடம்பெற்ற வீதி விபத்தில் 29 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந் துள்ளார். அக்கரைப்பற்றில் இருந்து கோமாரியில் உள்ள தனது வீட்டுக்குச் செல்லும் வழியில் தம்பிலுவில் சரஸ் வதி பாடசாலை அருகே உள்ள வளைவில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகே உள்ள மதிலில் மோதியதில் இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. கோமாரியில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான புலேந்திரன் (29 வயது) என்பவரே இவ் விபத்து சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு மஹிந்த நடவடிக்கை



நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நிவாரணத் திட்டங்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனர்த்த நிலையை எதிர்கொள்வதற்கு எதிரணியினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

# எட்டு ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தம்

மண்சரிவு எச்சரிக்கை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக ரயில் தண்டவாளத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளமையால், கொழும்பு கோட்டைக்கும் கண்டிக்கும் இடையிலான எட்டு ரயில் சேவைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ரயில்வேத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மோசமான வானிலைக்கு மத்தியிலும் ஊழியர்கள் தற்போது பாதையை புனரமைக்க முயற்சித்து வருகின்றனர் என இலங்கை ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் கசுன் சாமர தெரிவித்தார்.

‘ரயில்களை விரைவில் வழமைக்கு கொண்டு வர எதிர்பார்க்கிறோம்,’ என்று அவர் கூறினார். ‘கண்டி பாதையில் உள்ள தடங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை - பதுளை பிரதான பாதையில் ரம்புக்கனைக்கும் கடிகமுவவிற்கும் இடையில் ரயில் பாதையின் இரண்டு பகுதிகள் மண்சரிவால் சேதமடைந்துள்ளன. மேலும் ரயில் பாதையில் பாரிய பாறைகள் சரிந்து விழுந்ததமையால் தண்டவாளம் சேதமடைந்துள்ளது.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளைப் புனரமைப்பதற்கு பல நாள்கள் ஆகலாம் எனவும், இந்த பாதை புனரமைக்கப்படும் வரை பிரதான பாதை கொழும்பு கோட்டையில் இருந்து ரம்புக்கனை வரை மட்டுமே ரயில் சேவை முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மதுரங்குளிய துணை மின் நிலையத்துக்கு அருகிலுள்ள வீதி மற்றும் பங்கதெனிய ரயில் நிலையத்துக்கு அண்மித்த வீதியில் தெதுறு ஓயா பெருக்கெடுத்து ஓடுவதால், கொழும்பு கோட்டையில் இருந்து புத்தளம் பாதையில் சிலாபம் வரை மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவைகள் நீர் குறையும் வரை இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளம் பாதித்த மக்களுக்கு லயன்ஸ் கழகங்களால் உதவி!

## மோதிறை மட்டக்குளி லயன்ஸூம் வடக்குக்கு உதவி



யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகங்களும் கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான லயன் எஸ்.ரெங்கநாதனின் ஏற்பாட்டில் மோதிறை மட்டக்குளி லயன்ஸ் கழகமும் இணைந்து ஆளுநர் சபையின் பிரதிப் பொருளாளர் லயன் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியின் ஒழுங்கமைப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுகள் வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த உணவு வழங்கும் பணியில் யாழ்ப்பாணம் நகர லயன்ஸ் கழகம், மோதிர மட்டக்குளி லயன்ஸ் கழகம், இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம் கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகம் மற்றும் இருபாலை நகர லியோக் கழகம் ஆகியன இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீர்கொழும்பு – புத்தளம் வீதி பாதிப்பு

நீர்கொழும்பு – புத்தளம் பிரதான வீதியின் கொடவல முச்சந்தியில் மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

இதன்காரணமாக அந்த பகுதியூடான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கொவிட் உறுதிப்படுத்தப்பட்ட தாய், மகள் தப்பியோட்டம்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட தாய் ஒருவரும் அவரது மகளும் வைத்தியசாலையிலிருந்து தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

காய்ச்சல் மற்றும் தடிமன் காரணமாகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) வருகை தந்த 31 வயதுடைய தாய்க்கும் அவரது 10 வயதான மகளுக்கும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

இந்நிலையில் குறித்த இருவருக்கும் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து சிகிச்சைக்காக விடுதிக்கு அழைத்துச் செல்லும் பொருட்டு நோயாளர்கள் அனுமதிக்கும் அறைக்கு முன் னால் உள்ள கதிரையில் அமர்ந்திருந்துள்ளனர்.

சிற்றூழியர் ஒருவர் இவர்களை விடுதிக்கு அழைத்துச் செல்வதற்காக நோயாளியைத் தேடியபோது தாயும், மகளும் வைத்தியசாலையை விட்டுத் தப்பியோடி உள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

குறித்த இருவரும் சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. மேற்படி நோயாளிகள் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகம் வைத்தியசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள தாகவும் தெரியவருகின்றது.

நோயாளர்கள் தமக்கு கொவிட் எனத் தெரிந்த போதிலும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதால் இன்னும் பலருக்குத் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டு வருவதாகவும் வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எழுச்சியை முறியடிக்க முடக்கம்!

**அரசின் சீர்கெட்ட நிர்வாகத்தினாலும், ஆட்சி முறைப் போக்கினாலும் மக்களின் அதிருப்தி உச்சம் பெற்று வருகின்றது.**

**பெருத்த எதிர்பார்ப்போடு ஜனாதிபதித் தேர்தலிலும், பின்னர் பொதுத் தேர்தலிலும் ராஜபக்ஷக்களுக்கு வாக்குகளை அள்ளிக் கொட்டிய இலங்கை மக்கள் – குறிப்பாக தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்கள் – அதிருப்தியின் உச்சத்தில் உள்ளனர். விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளினால் மிகுந்த சிக்கல்களை எதிர்கொண்டிருக்கும் பாமர மக்களின் சீற்றம் அரசுக்கு ஆட்சிப் பீடத்துக்கு எதிராகத் திரண்டு வருகின்றது.**

**இந்த உணர்வெழுச்சியை வாய்ப்பாகப் பயன்படுத்தி ராஜபக்ஷக்களின் அதிகார பீடத்தை வீட்டுக்கு அனுப்பக் கங்கணம் கட்டி நிற்கின்றன எதிர்க்கட்சிகள்.**

**ராஜபக்ஷக்களின் அதிகார பீடத்துக்கு எதிரான அதிருப்தி அலை – சீற்றம் – வெறுமனே மக்கள் மத்தியில் மட்டும் தான் பதிந்துள்ளது என்பதல்ல, அல்லது எதிர்க்கட்சிகள் இடையேதான் ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதல்ல, அவற்றையும் தாண்டி, ஆளும் மொட்டுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மத்தியிலும் அது ஆழ ஊன்றி விட்டது.**

**இந்த எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு மக்கள் போராட்டங்களாக ஆங்காங்கே பீறிட்டு, வெடித்து, வெளிப்படத் தொடங்கியுள்ளது.**

**அதை எதிர்கொள்ள முடியாத ஆட்சிப்பீடம் வழமை போலவே கொரோனாத் தொற்று, சுகாதார விதிமுறை மீறல், சமூக இடைவெளிகளைப் பேணாமை போன்றவற்றைக் காட்டி மக்களின் உணர்வெழுச்சியை அடக்கி ஒடுக்கத் தயாராகி வருகின்றது.**

**மக்களின் எதிர்ப்புக் கூட்டங்களை ஒட்டி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று வெளியிட்ட கருத்துப் பிரதிபலிப்பு அதனைத்தான் உறுதிப்படுத்தி நிற்கின்றது.**

**“போராட்டங்கள் மற்றும் ஊர்வலங்களை நடத்துவதற்காக மாத்திரம் புதிய பொதுமைப்படுத்தல் வாய்ப்பை எதிர்க்கட்சியினர் பயன்படுத்துவது கவலையளிக்கின்றது” – என்று நேற்றுக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**“நாடு திறக்கப்பட்டு, புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் அனைத்துச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், போராட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் காரணமாக மீண்டும் கொவிட் தொற்றுப் பரம்பல் ஏற்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டை மீண்டும் ஒருமுறை முடக்க நேரிடலாம். அதன் காரணமாக பொதுமக்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் புரிந்து கொள்ள வேண்டும்.” – என்று ஜனாதிபதி நேற்று எதிரணியினரைப் பார்த்து எச்சரித்திருக்கின்றார்.**

**ஜனாதிபதியின் இந்த எச்சரிக்கையும், தீவிரம் பெறும் எதிரணித் தரப்பின் எழுச்சி மிக்க போராட்டங்களும் ஒரு விடயத்தை நமக்கு உறுதிப்படுத்தி நிற்கின்றன.**

**அது – நாடு இன்னொரு தடவை முடக்கப்படுகின்றதோ இல்லையோ, எதிரணியினர் முன்னெடுக்கும் அரச எதிர்ப்புப் போராட்டங்களும், எழுச்சிப் பேரணிகளும், சுகாதார நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாட்டு விதிமுறைகளின் கீழ் முடக்கப்படப்போகின்றன என்பது தான் அது.**

**மக்களின் எதிர்ப்பு உணர்வெழுச்சியை எதிர்கொள்ள – முகம் கொடுக்க – இயலாத ராஜபக்ஷக்கள் அதைத் தடுப்பதற்கு கொவிட் தொற்றையே துரும்பாகக் கையாள்வர் என்பது எதிர்பார்க்கப்படும் விடயம்தான்!**

# வவுனியா பாவற்குளத்தின் நீர்மட்டம் 16 அடியாக உயர்வு!

வவுனியா பாவற்குளத்தின் நீர்மட்டம் 16 அடியாக உயர்வடைந்துள்ளது என மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் கே.இமாசலன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைந்து வருகின்றது.

அந்தவகையில், மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழான பாவற்குளம் 19.4 அடி நீர் கொள்ளளவைக் கொண்டுள்ள நிலையில் அதன் நீர்மட்டம் தற்போது 16 அடியாக உயர்வடைந்துள்ளது. தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் அதன் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைக்கூடியநிலையே உள்ளது.

எனவே, அதன் கீழ் உள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். அத்துடன், முகத்தான் குளத்தின் நீர்மட்டம் 11 அடி 5 அங்குலமாகவும், மருத மடுக்குளம் 12 அடி 3 அங்கு லமாக நீர்மட்டம் அதிகரித்துள்ள நிலையில் இரு குளங் களினதும்வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் அதன் கீழ் பகுதிகளில் இருக்கும் மக்கள் அவதானமாக செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஈரப்பெரியகுளம் 10 அடி 9 அங்குலமாகவும், இராசேந்திர குளம் 11 அடியாகவும் உயர்வடைந்துள்ளது. அருவி ஆறு 6 அங்குலம் நீர் பாய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வி.பி.பவுண்டேஷன் தொண்டர்களால் முல்லை கடற்கரையில் சிரமதானப்பணி



முல்லைத்தீவு மாவட்டத்தில் பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனையால் ஏற்படும் தீமைகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் வி.பி.பவுண்டேஷன் தனது தன்னார்வ சேவைகளில் ஈடுபட்டு வருகிறது.

இதன் ஓர் அங்கமாக வி.பி. பவுண்டேஷன் தொண்டர்களால் முல்லைத்தீவு கடற்கரையில் பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருள்களை அகற்றும் நோக்குடன் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வி.பி.பவுண்டேஷன் ஸ்தாபகரும் இயக்குநருமான தெய்வேந்திரம் இந்திர தாஸ் மற்றும் வி.பி. பவுண் டேஷன் தொண்டர்கள் இணைந்து குறித்த சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர்.

## காலநிலை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சியில்

காலநிலை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் நேற்று (புதன்கிழமை) கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸார், இராணுவத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் நாள்களில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர் பில் இதன்போது கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## துமிந்த நாகமுவ உள்ளிட்ட ஐந்து பேருக்குப் பிடியாணை

முன்னிலை சோலிசக் கட்சியின் துமிந்த நாகமுவ உள்ளிட்ட ஐவரை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடுவலை நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று(புதன்கிழமை) இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடுவலை நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது கட்டுப்பாடற்ற விதத்தில் செயற்பட்டமைக்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2021
“மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம்
ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை”
- கத்ரீனா மேயர்
(அமெரிக்க எழுத்தாளர்)


காலைக்கதிர்
Kalaikkathir

# பற்றிக் பயிற்சி நிலையங்கள் திறப்பு சிறந்த மாற்றங்களை ஏற்படுத்தும்

## பிரதமர் நம்பிக்கை வெளியீடு

புதிதாக நிறுவப்பட்டுள்ள பயிற்சி நிலையத்தின் ஊடாக நவீன தேசிய ஆடைகள் மற்றும் நவீன பற்றிக் கலை உருவாகும் என தான் நம்புகிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள 160 பற்றிக் மற்றும் உள்ளூர் ஆடை தொழிற்சாலை பயிற்சி நிலையங்களை அலரி மாளிகையிலிருந்து இணையவழி ஊடாக குறியீட்டு ரீதியாகத் திறந்து வைத்த போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் மற்றும் நிறுவனத் தலைவர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் ஆரம்ப நிகழ்வு இடம்பெறறது.

இந்த நிகழ்வுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ஒபேசேகர எசல விளையாட்டு மைதானத்தின் அருகே நிறுவப்பட்ட பயிற்சி நிலையமும் குறியீட்டு ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகேவும் கலந்து கொண்டார். பற்றிக் பயிற்சி உற்பத்தி செயற்பாடு தொடர்பிலான ஆவணப் படமும் இதன்போது ஒளிபரப்பப்பட்டது.

மேற்படி நிகழ்வில் பிரதமர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு –

எமது நாட்டுக்கு வண்ணமயமான கலாசாரம் போன்றே வண்ணமயமான வரலாறும் காணப்படுகிறது. நமது நாடு பல இனக்குழுக்கள் மற்றும் மதங்களை உள்ளடக்கிய நாடாகும்.

நம் மக்களின் எண்ணங்கள், அபிலாஷைகள், வாழ்க்கை முறைகள் மற்றும் நாகரிகங்கள் மிகவும் வண்ணமயமானவை. நம் நாட்டில் திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு, கைத்தறி ஆடைகள் மிகவும் பிரபலமாக இருந்தன. ஆனால் திறந்த பொருளாதாரம் அறி முகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து வெளிநாட்டு ஆடைகளுக்கான கதவுகள் திறக்கப்பட்டன. இதனால் ஏற்பட்டுள்ள துர திஷ்டமான விடயம் என்னவென்றால், நமது உள்ளூர் பொரு ளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டிய தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன. திறந்த பொருளாதாரம் எமது நாட் டுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட போது உள்ளூர் விடயங்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டம் அப்போது இருக்கவில்லை. அதன் விளைவுகளைப் பல தசாப்தங்களாக அனுபவித்து வருகிறோம். எனவே, உள்ளூர் உற்பத்தியை அதிகரித்து, அந்த உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதில் நாம் இன்னும் சவாலை எதிர்நோக்குகின் றோம். கைத்தறி ஆடை தொழில் வளர்ச்சியடைந்து வந்த அந்த பொற் காலத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற் காகவே நாம் தனியான இராஜாங்க அமைச்சைக் கூட உருவாக்கினோம்.

அந்த அமைச்சிற்கு தயாசிறி போன்றதொரு அமைச்சரை மிகுந்த நம்பிக்கையுடன் நியமித்தோம். அமைச்சர் தயாசிறி போன்றே அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகளும் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றமையை நாம் அறிவோம்.

அரசாங்க ஊழியர்களுக்கு உளளூர் ஆடைகளை அணிவிப்பதற்கு பாரிய முயற்சிகளை முன்னெடுத்தார்கள். வாரத்தில் ஒரு நாள் பற்றிக் உடை அணிவதற்கான நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டமை எனக்கு நினைவிருக்கிறது.

இந்த விடயங்கள் கொவிட் மூலம் மறக்கடிக்கப்பட்டாலும், அதன் மூலம் சமூகத்திற்கு வழங்கும் செய்தி முக்கியமானது என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும். அது மாத்திரமன்றி வெசாக் பண்டிகையை முன்னிட்டு பற்றிக் வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டன.

புத்தாண்டு தினத்தன்று மக்கள் பற்றிக் ஆடைகளை அணிய ஊக்குவிக்கப்பட்டனர். மக்கள் விருப்பத்துடன் அவ்விட யங்களை முன்னெடுப்பதைப் பார்த்தோம். இவை ஊடாக நாட்டில் பற்றிக் ஆடை அணிவதும், பற்றிக் அலங்காரங்களுக்குமான அலை ஏற்பட்டது என்பதை நாம் அறிவோம்.– என்றார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட சிவநகர் பகுதியில் இளைஞன் ஒருவர் எடுத்த தவறான முடிவால் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிவநகர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே நேற்று அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

குறித்த இளைஞனின் உயிரிழப்பு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன் பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் இளைஞர்கள், யுவதிகள் தவறான முடிவெடுக்கும் இவ்வாறான பல சம்பவங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# சமையல் எரிவாயுவுக்காக யாழில் வரிசையில் மக்கள்

யாழ்.மாவட்ட மக்கள் பல நாள்களாக சமையல் எரிவாயு கிடைக்காமல் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலைமையில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகிறோம் என யாழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

சமையல் எரிவாயுவுடன் லொறி வரும் வரை பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. எரிவாயு வந்த பிறகும், எரிவாயு வாங்க மக்கள் கடுமையாகப் போராட வேண்டியுள்ள நிலைமையே உள்ளது.

இதேவேளை, எரிவாயு விற்னை நிலையத்துக்கு முன்னால் யாழ் மக்கள் சிலிண்டருடன் நீண்ட வரிசையில் காத்திருக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


# பொய்கள் பேசுகின்றமை மதகுருவுக்கு அழகல்ல!

## அருட்தந்தையை எச்சரித்த தேரர்

பேசுவதற்கு இடம் கிடைத்ததென்று வாயில் வந்த பொய்களையெல்லாம் பேசுவது ஒரு சரியான மதகுருவிற்கு அழகில்லை என அருட்தந்தை சிறில் காமினிக்கு மாகல்கந்த சுதந்த தேரர் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் கத்தோலிக்க அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மகாசங்கத்தினர் எனக் கூறிய 2 தேரர்கள் எனப் பல பேர் ஆர்ப்பாட்டமொன்றைச் செய் தார்கள்.



அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்த சர்ச்சையான கருத்து தொடர்பாக அவரை கைது செய்வதைத் தடுப்பதற்காக நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்த கருத்து உண்மையென்றால் வீணாக அவர் ஒளிந்து திரியத் தேவையில்லை. குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவிற்கு வந்து அந்த விடயம் தொடர்பாக வாக்குமூலத்தை வழங்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

பேசுவதற்கு இடம் கிடைத்ததென்று வாயில் வந்த பொய்களையெல்லாம் பேசுவது ஒரு சரியான மதகுருவிற்கு அழகில்லை என அருட்தந்தை சிறில் காமினிக்கு நான் நினைவுபடுத்திக் கொள்கின்றேன்.

புலனாய்வுபிரிவின் பணிப்பாளர் சுரேஷ் சலேவை இலக்கு வைத்து மற்றும் தேசியப் பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலான விடயங்களைக் கூறியமையால் இன்று அவற்றை நிரூபிக்க முடியாமல் உள்ளார். கத்தோலிக்க மக்களையும், மதகுருமார்களையும் அச்சமூட்டுவதற்காக இவர்கள் இப்படி செய்கின்றார்கள்.

அருட்தந்தை சிறில் காமினி கைது செய்யப்படமாட்டார் எனக் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெளிவாக அறிவித்தனர். இருந்தும் இவர் இன்னும் தன்னை கைது செய்ய முயற்சிகள் இருக்கின்றன எனத் தெரிவித்து வதந்திகளைப் பரப்பி வருகின்றார். நீங்கள் ஊடகத்துக்கு ஒரு விடயத்தைக் கூறுவதாயின் அதற்கான சாட்சிகள் உங்களிடம் இருக்கவேண்டும்.

அதைவிடுத்து தம்முடையவர்களுக்காக மாத்திரம் பொய்களைக் கூறுகின்றமை மிகவும் தவறான விடயம். கடந்த நல்லாட்சியில் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடனும், அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புடனும் புலனாய்வு பிரிவினருக்கு எதிராகப் பல சம்பவங்கள் இடம் பெற்றன. கைதுகள் இடம்பெற்றன.

இதனால் முழு புலனாய்வுத் துறையும் உடைந்தது. இன்றும் அருட்தந்தை சிறில் காமினி உள்ளிட்டவர்கள் எதிர்க்கட்சியினரின் தேவைகளை நிறைவேற்றி, அவர்களுடைய ஆலோசனைகளுக்கு அமையவே இவர்கள் இவ்வாறு செய்கின்றார்கள் எனத் தெரிவித்துள்ளார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் - 188

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**474. தங்களது நிலைமைகளுக்கு இந்தியா தான் காரணம் என்று தமிழ் மக்கள் நினைக்கிறார்களே?**

தாங்கள் அவர்களின் தொப்புள்கொடி உறவுகள் என்ற எண்ணங்களில் அவர்கள் மனம் வருந்துகின்றார்கள். ஆத்திரம் கொள்ளுகிறார்கள். அது புரிந்து கொள்ளக் கூடியது. நியாயமானதும் கூட.

பொதுவாக, இந்தியா தமிழருக்காகவே எப்பொழுதும் இருக்க வேண்டும் என்ற எண்ணப்பாங்கில் அது வளர்ந்தது. இந்தியாவிற்குள் இருக்கின்ற மாநிலங்களின் போட்டிகள், பிரிவினைகள், ஆரியத்தின் வடக்கு என்ற முனைப்பு, திராவிடத்தின் தெற்கு என்ற பெருமை, அவற்றை ஒட்டியான பார்வைகள், திராவிடஸ்தான், தனித் தமிழ்நாடு அமைய வேண்டும் என்றுஎழுந்த கோரிக்கைகள், அவையெல்லாவற்றுக்கும் மேல் இந்தியக் கடற்பரப்பில் அதன் வல்லரசுப் போக்கு, அதற்கு இடைஞ்சலானவை பற்றிய ஆழமான புரிந்துணர்வு இல்லாதமை போன்றன இந்த எதிர்பார்ப்புக்களை வளர்த்தன.

தேசங்களின் அரசியல் அவற்றின் நலன்களை ஒட்டிய சுயநலங்களில் நடப்பது.

திருகோணமலை துறைமுகமும் அதனைச் சார்ந்த மண்ணும் தங்களது பாதுகாப்புக்கு அச்சுறுத்தும் வகையில் பாவிக்கப்படலாம் என்று கருதி இந்தியா 1987 இல் ஸ்ரீலங்காவோடு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. அதன் அதிகாரத்தால் அது மேற்கொள்ளப்பட்டது. அது அன்றைய சர்வதேச வல்லரசு சூழலில் ஆக்கப்பட்டது.

இன்று சீனாவின் எழுச்சியால் அச்சுறுத்தப்பட்ட அமெரிக்கா, இந்தியா



நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்

வின் அனுசரணையையும் பெற்று, திருகோணமலையில் ஆதிக்கத்தை மேற் கொள்வதற்காக அப்போது நடந்து கொண்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் குழப்பி விடுதலைப் புலிகளையும் அழிக்கத் துணை போனது. அதற்காக அமெரிக்கா எடுத்துக் கொண்ட செயற்பாடுகள் பற்றி தெளிவாக இருந்த தகவல்களிலிருந்தும், கசிய விடப்பட்டவைகளிலிருந்தும் இதற்கு முந்திய பகுதிகளில் சொல்லியிருந்தேன். அதனை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். தமக்கே உரித்தான திருகோணமலை துறைமுகத்தையோ அதன் மண்ணையோ தங்களின் சுயநலத்திற்காக இந்த பூசல்களுக்கிடையே இணைத்து நீந்திக் கரைசேர்ந்துவிட தமிழ் மக்கள் யதார்த்தமான வழிகளை வகுக்கவில்லை.



இலங்கை - இந்திய ஒப்பந்தம்

**475. இப்பொழுது நொந்து கொள்வதில் என்ன பயன்? இப்பொழுதும் அப்படி வழிகள் தேடுவதாக தெரியவில்லையே?**

தமிழ் மக்கள் சந்தித்த இனக்கொலையிலிருந்து மிகத் தெளிவாக ஒன்றை அவர்கள் புரிந்து கொண்டு அந்தப் புரிதலில்தான் தங்கள் பாதைகளை அமைக்க வேண்டும். சிங்கள அரசியல் தலைவர்களோ அல்லது பௌத்த மதக் காப்பாளர்களோ எந்த அளவிலும் தமிழ் மக்களுக்கு ஒரு நீதியான தீர்வைத் தருவார்கள் என்று யாரும் நம்பவில்லை. சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் மக்களோடு எந்தவித அரசியல் சமரசத்துக்கும் வர , இன்றும் கூட தயாராக இல்லை. ஆகவே தமிழ் மக்களின் பாதுகாப்பும் அவர்களது எதிர்கால அரசியலும் தமிழீழ விடுதலைப் போராளிகள் எடுத்த ஆயுதப் போராட்டத்திலேயே தங்கியிருந்தது. அதன் வளர்ச்சியையும் அர்ப்பணிப்பையும் கண்டு சிங்களத் தலைவர்கள் பயந்தார்கள்.

அதை அழியாது, அழியவிடாது, அதனை முன்னெடுத்த தலைவர்க ளால் அது பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்காக சர்வதேச பல்லாங்குழி களை தமிழ் மக்களோடு சேர்த்து எடுத் திருக்க வேண்டும். அதன் முதற் கட்டம் இந்தியாவாக இருந்திருக்க வேண்டும்.

பால் சுரந்த தாயின் முலையில் கன்று மேலும் பால் சுரக்க முட்டியிருக் கலாம். அவை பாசங்களின் வலி. அவ்வ ளவில் இருந்திருந்தால் பின்னர் இடப்பட்ட பயங்கரவாத முத்திரைகள் வந்த காலங்களிலும் அவர்களோடு இணைந்து, அமெரிக்காவின் ஆதங்கத்தை அணுகி, தமிழ் மக்களைப் பலப்படுத்தியிருக்கலாம்.

ஆனால் விடுதலைப் புலிகளோ தாமே ஏகோபித்த தலைவர்கள் என முடிவுகள் செய்ய, அவர்களின் அனுசரணைகளில் ஒப்புக்காகத் தேர்தலில் வென்று நாடாளுமன்றம் போன தலைவர்கள் இந்தக் காலங்களில் ஒப்புக்காகவே தலைமைகளுக்காக புற்றெடுக்க, மஹிந்த ராஜபக்ஷவோ சர்வதேசத்தைத் தம் பக்கம் சாய்க்கக் கூட இந்தியாவை முதலாவதாக அணுகினார். தமிழ் மக்கள் வாழ்விழந்தனர். இந்த அட்டூழியங்களின் தடங்களும் அங்குதான் தடம்புரண்டன. உருவாகின.

தீர்ப்பாயம், ஸ்ரீலங்கா அரசுக்கு தாங்களாகவே இந்த இனப்படுகொலையை நடத்திக் கொள்ளக் கூடிய திறன் இருக்கவில்லை என்றும், அதற்கு அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா ஆகியவற்றின் உடந்தையும் இருந்ததாக அபிப்பிராயம் தெரிவித்தது. அதிலும் அமெரிக்கா, பிரித்தானியா இரண்டும் கூட்டாளிகளாகப் பங்குபற்றின என்றும் கூறியது.

இதில் இந்தியாவை 'கூட்டாளி' என்று கூண்டில் போடாது, தொடர்ந்தும் பெற வேண்டிய சாட்சியங்களிலிருந்து அவை மீண்டும் ஆராயப்பட வேண்டும் என தீர்ப்பாயம் குறிப்பிட்டது.

**476. இவற்றுக்காகத்தானா தமிழ் மக்களின் தலைமைகள் இந்தியாவுடன் இணக்கம் காண முன்வரவில்லை?**

அப்படியென்று வரையறைந்து கூற முடியாது. அதனுடைய பாதுகாப்புக்கு, அதனது நலனில் இந்தியாவுக்குத் தேவைகளிருந்தது. ஆனால் தமிழ் மக்களது அனுபவங்களில் அவர்களின் இருப்பைக் கூட தக்கவைத்துக் கொள்ள ஓர் அடித்தளம் தேவைப்பட்டது.

வலிகள் தமிழ் மக்களுடையவை. அவற்றுக்கு அனுசரணையை அவர்கள் தான் தேடிக்கொள்ள வேண்டும்.

மேற்கத்தைய நாடுகளில் பிரித்தானியா, அமெரிக்கா போன்றவை ஆதங்கங்கள் காட்டுகின்றன. அந்த சர்வதேசம் அவர்களை கைவிடாது என்று நம்பி, இந்தியாவைத் தவிர்த்திருந்தால். அந்த நாடுகள் தங்கள் நலனுக்காக நடத்தியவற்றையும் தீர்ப்பாயத்தின் முன் வந்த ஆதாரங்களிலிருந்தும் கணித்துக் கொள்ள வேண்டும்.

இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின் 13 ஆம் சரத்து தமிழர் விடுதலை கூட்டணியின் அனுசரணையிலேயே வடிவமைக்கப்பட்டது. ஆனால் அதை ஏற்று அமுல் நடத்தக் கேட்க அதன் அதிகாரங்கள் போதாது என்று கூட்டணியே கைவிட்டது. அவர்கள் அதற்கு முன்னர் மாவட்ட சபையை அதிகாரங்களுக்காக ஏற்றவர்கள். விடுதலைப் புலிகள் எடுத்த நிலைப்பாட்டிற்கு மறுதலிக்காமல் விலகினர். பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அதனை நடைமுறைப்படுத்த முன்வர அதுவும் பிரேமதாஸாவின் துணையினால் விடுதலைப் புலிகளால் கலைக்கப்பட்டது.

இப்போதும் 33 வருடங்களின் பின் 13 ஆவது சரத்தை அமுல்படுத்தக் கோருவதற்கு தமிழ்த் தலைமைகளிடையே ஒற்றுமையின்மை. கூட்டமைப்புக்குள் அதையொட்டிக் கருத்து வேற்றுமை, அதில் ஒரு பகுதி அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கு எனப் புறப்படுகின்றது. இன்னொன்று இந்தியாவுடன் பேச வேண்டும் என்கின்றது. ஆனால் 33 வருடங்களின் பின் அதனை எந்த விதத்தில் அமுல்படுத்த வேண்டும் என்ற தெளிவின்மை. இன்னுமொரு தலைமையில் நீதியரசர் விக்னேஸ்வரன் இந்த **Responsibility to Protect** தலையீட்டை தலைமை ஏற்று முன்னெடுக்கும் எல்லாத் தகுதிகளும் இந்தியாவுக்கு வரலாற்று ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும், இலங்கை - இந்திய ஒப்பந்த ரீதியாகவும் இருக்கின்றது என்கிறார். ஆதலால் இலங்கையில் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு இந்தியா முறை யானதும் வினைத்திறன் மிக்கதுமான ஒரு தலையீட்டாளர் ஆகும் என்கிறார். தமிழ் மக்கள் தங்கள் தலைவலிக்கு தலையைத் தடவிக் கொள்வதா, தலை மயிர் இருப்பவர்கள் அதனைப் பிய்த்துக் கொள்வதா, மறைக்கூடங்களின் போதனை என்ன என்று தெரியாமல் குழம்புகிறார்கள்.

(வளரும்...)



இயற்கையாக அமைந்த திருமலைத் துறைமுகம்

# ஜனாதிபதி கோட்டாபயவுக்கு முதுகெலும்பில் பலமில்லையா?

## திருமலை மாவட்ட மீனவர் சங்கம் கேள்வி

திருகோணமலையில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க எமது ஜனாதிபதிக்கு முதுகெலும்பில் பலம் இல்லையா என பகிரங்க கேள்வி ஒன்றைத் திருகோணமலை மாவட்ட மீனவர் சங்கம் கேட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

மேலும் அவர்கள் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது -

திருகோணமலையில் தொடர்ச்சியாக சட்டவிரோத வெடிபொருள் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதை இந்த அரசாங்கம் தடுக்க முடியாமல் இருப்பதாகவும் இது தொடர்பில் ஆதாரங்களுடன் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருப்பது அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்பட்டது போன்று பல கிலோ கணக்கில் வெடிபொருள்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் இதனைத் தடுப்பதற்கு ஜனாதிபதிக்கு முதுகெலும்பில் பலம் இல்லையா எனவும் விசனம் தெரிவித்தனர்.

மேலும் அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது சட்டவிரோத மீன்பிடியை முற்றாகத் தடைசெய்வதாக வாக்குறுதியளித்து ஆட்சியில் அமர்ந்ததன் பின்னர் ஏன் இந்த வேலையைச் செய்யமறுக்கின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களை கைது செய்யாமல் இருந்தால் எவ்வாறு நாங்கள் எங்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுப்பது மேலும் இந்திய மீனவர்கள் வடக்கு பிரதேசத்தில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் ஏன் எமது கடற்படைக்கு இதனைத் தடுக்கமுடியாமல் உள்ளது ஏன் இரண்டு நாடுகளுக்கும் பிரச்சினை ஏற்படும் என ஐயம் கொள்கின்றனரா?

நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்து தமது சொத்துக்களை சேமிக்கின்றனர் அவ்வாறு செய்வதை விட்டு விட்டு இந்த நாட்டில் தினக்கூலி தொழிலாளிகளை பார்க்கவும் எமது மீனவர்களின் ஜீவனோபாயத்தைப் பாதுகாக்கவும் திருகோணமலையில் இவ்வாறு பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நிவாரணம் தருகிறோம் என திருகோணமலை மாவட்ட அரசியல் வாதிகள் வாக்குறுதி தந்திருந்தனர்.



இதுவரை எந்த நிவாரணமும் எமக்கு கிடைக்கவில்லை நாட்டின் அரசியல் வாதிகளுக்கு நாட்டின் மேல் பற்று இருக்க வேண்டும். இவர்களுக்கு அவ்வாறு நாட்டுப் பற்று இல்லை நாட்டை ஆட்சி செய்வதாக இருந்தால் சரியாக ஆட்சி செய்யவேண்டும் நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த வேண்டும் மக்களின் பிரச்சினைகளுக்கு செவி சாய்க்க வேண்டும் என இறுதியாக ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம் என திருகோணமலை மாவட்ட மீனவர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் மாவட்ட மீனவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா உப பஸ் டிப்போ டிப்போவாக தரமுயர்த்தப்படும்

## திலும் அமுனுகம உத்தரவாதம்



கிண்ணியா உப பஸ் டிப்போ, டிப்போவாக தரமுயர்த்தப்படும் எனப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிண்ணியா பஸ் டிப்போ தொடர்பாக எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னதாக கேள்வி எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் –

இது எனது தந்தையால் 1994.07.27 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்டு 27 வருடங்கள் கடந்தும் இன்னும் உப டிப்போவாகவே காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை போக்குவரத்து சபையின் முதலாவது உபசாலை இதுவாகும். கிண்ணியாவிற்கு பின்னர் உபசாலைகளாக ஆரம்பிக்கப்பட்ட காத்தான்குடி, களுவாஞ்சிகுடி உபசாலைகள் தற்பொழுது டிப்போவாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

எனவே இதை டிப்போவாக தரமுயர்த்த முடியுமா எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர், அரசின் செலவினங்களைக் குறைக்கும் முகமாக அருகருகே உள்ள உப பஸ் டிப்போக்களை மூடுகின்ற கொள்கையில் அரசு இருந்தாலும் கிண்ணியா உப பஸ் டிப்போ பிரதான பஸ் டிப்போவில் இருந்து 20 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளதால் இது டிப்போவாக தரமுயர்த்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது

மட்டக்களப்பு - கல்குடா பொலிஸ் பிரிவில் பட்டியடிச்சேனை தாமரைக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடம் இருந்து கசிப்பு மற்றும் அதற்குரிய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தன விதானகே தெரிவித்துள்ளார்.

பட்டியடிச்சேனை தாமரைக்குளம் பகுதியில் கசிப்பு காய்ச்சுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் சென்ற குழுவினர் மேற்கொண்ட முற்றுகையின் போது மூவாயிரம் மில்லி லீற்றர் கசிப்பு. நாலாயிரத்து எழுநூற்று ஐம்பது மில்லி லீற்றர் கோடா மற்றும் தளவாட உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரை வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எச்.எம்.எம். பஸீல் முன்னிலையில் முன்னிறுத்திய போது நாற்பத்தையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டார் எனவும் கல்குடா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பில் பொலிஸ்காவலில் இளைஞன் சாவு; விசாரணை அதிகாரிகளை மன்றில் முற்படுத்துக!

## நீதிபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

மட்டக்களப்பில் கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட விதுசன் என்ற இளைஞரின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளதால் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் விசாரணை செய்த பொலிஸ் அதிகாரிகளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன் போது தோண்டி எடுக்கப்பட்ட விதுசனின் சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையின்படி விதுசனின் உடலில் அடிகாயங்கள் உள்ளன எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், விதுசனை கைது செய்ய சென்ற பொலிஸ் அதிகாரிகளை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதிபதி மன்றில் அறிவித்தார்.

மட்டக்களப்பு ஜெந்திபுரம் பகுதியைச் சேர்ந்த சந்திரன் விதுசன் எனும் இளைஞனை கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி ஐஸ் போதைப் பொருள் வியாபாரம் செய்தார் எனக் கூறி இரவு 10.45 மணியளவில் கைது செய்யப்பட்ட நிலையில் மறுநாள் காலை அவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் இருக்கும் போதே மரணமடைந்தார். குறித்த மரணம் ஐஸ் போதைப் பொருள் உள்கொண்டதாலேயே ஏற்பட்டதாக பொலிஸ் தரப்பு கூறியது.

அதே போல் மரணம் தொடர்பாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையிலும் குறித்த இளைஞனின் மரணம் ஐஸ் போதைப்பொருள் உள்கொண்டமையாலே ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை தனது மகனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் பொலிஸார் அடித்ததாலேயே தனது மகன் மரணம் அடைந்திருக்கலாம் என நீதிமன்றத்தில் சந்தேகம் எழுப்பப்பட்டதால் புதைக்கப்பட்ட விதுசனின் உடலை மீண்டும் தோண்டி எடுத்து இலங்கையிலேயே பிரேத பரிசோதனையில் விசேட நிபுணத்துவம் வாய்ந்த பேராதனைப் பல்கலைக்கழகத்தினுடைய பேராசிரியர் முன்னிலையில் மீளவும் பிரேத பரிசோதனை செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் தற்போது குறித்த பிரேதப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்துக்கு கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் அதில் ஏற்கனவே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கைக்கு முற்றிலும் மாறுபட்ட அறிக்கையே வெளியாகியுள்ளது.

அதாவது மரணமடைந்த விதுசன் உடலில் அடித்து துன்புறுத்தப்பட்டதற்கான பல அடையாளங்கள் காணப்படுகின்றமையுடன் குறித்த இளைஞனின் மரணம் அடித்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாலேயே நிகழ்ந்திருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மரணமடைந்த இளைஞர் தொடர்பாக உடல் கூற்றுப் பரிசோதனை அறிக்கைகளின் படி குறித்த இளைஞனை பொலிஸார் இரவு முழுவதும் அடித்து சித்திரவதை செய்தே கொலை செய்துள்ளனர் என்ற சந்தேகம் எழுந்துள்ளதால் இளைஞனின் கைதுடன் சம்பந்தபட்ட பொலிஸாரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# 20 இற்கு கைதூக்கியவர்களையும் ராஜபக்ஷக்களையும் மக்கள் கழுத்தைப் பிடித்து வெளியில் விரைவில் வீசுவர்!

## நாடாளுமன்றில் சாணக்கியன் காட்டம்



மக்கள் ராஜபக்ஷக்களையும், அரசாங்கத்தை பலப்படுத்தும் கட்சிகளையும், 20 ஆம் திருத்தத்துக்குக் கைதூக்கிய நபர்கரளயும் கழுத்தைப் பிடித்து வெளியில் விரைவில் வீசுவார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இலங்கையில் தற்போது 200 கோடி டொலரே கையிருப்பிலுள்ளது.

இந்த நிலையில் இலங்கைக்கு டொலரால் வரும் அனைத்துக் கட்டணங்களையும் 180 நாள்களுக்குள் இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதற்கு சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளதன் ஊடாக நாட்டில் இருக்கும் டொலர் பற்றாக்குறையை உறுதிப்படுத்துகின்றன.

ஆனால், இந்த சட்ட மூலத்தால் இலங்கையிலுள்ள ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களிடையே கறுப்புச் சந்தையை ஏற்படுத்தும். குறிப்பாக, வர்த்தக அமைச்சர் எவ்வாறான விளக்கத்தை கொடுத்தாலும் புதிய சட்டத்தால் இலங்கையில் கறுப்பு டொலர் சந்தை ஏற்படும்.

கறுப்புச் சந்தையில் இன்று ஒரு டொலர் 240 ரூபாவிற்கு விற்பனை செய்யும் போது வெளிநாட்டில் வேலை செய்யும் பணிப்பெண்கள் கூட கறுப்புச் சந்தை ஊடாக இலங்கைக்கு அனுப்பலாம். இது நாட்டிலுள்ள டொலர் பற்றாக்குறையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த டொலர் பிரச்சினையை மூடி மறைப்பதற்கே இன்று உரப்பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால், இலங்கையில் தேவையான இராசாயன உரம் இருக்கின்றது.

எனினும், 2 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட யூரியா இன்று 14 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால், போராட்டம் செய்ய வேண்டியது விவசாயிகள் அல்லது வறுமையிலுள்ள மக்களே போராட வேண்டியுள்ளது.

விவசாகள் கடன் பெற்றாவது தங்களுடைய விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பர். ஆனால், வறுமையிலுள்ள மக்கள் பெரும் பாதிப்புகளை சந்தித்துள்ளனர்.

விவசாயிகள் பாதிக்கப்பட்டால் அதற்கான நஷ்டஈட்டைத் தருவதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், நஷ்டஈடு வழங்குவதா அரசின் கொள்கை. இந்த நஷ்டஈடும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பணத்தால் வழங்கப்படாது. மாறாக, இந்த நாட்டிலுள்ள மக்களின் வரிப்பணத்திலேயே வழங்கப்படும்.

இவ்வாறு நஷ்டஈடு வழங்கப்பட்டால் விவசாயிகளுக்கு பணம் கிடைக்கும். ஆனால், நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

அதேபோன்று, எதிர்வரும் சில மாதங்களில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்க முடியாது. இன்று மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்கின்றனர்.

எரிபொருள் நிலையங்களில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளும் பண பலம் படைத்தவர்கள் வீடுகளில் அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். மேலும், தொழில்நுட்ப பொருள்களுக்கு தற்போது கறுப்புச் சந்தை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் காலத்தில் வங்கிகளும் பாரிய வீழ்ச்சியை சந்திக்கும் என்பதையும் தடுக்க முடியாது. இவ்வாறான நிலையில் இலங்கை ரூபாவின் மீது நம்பிக்கை இழக்கும் பட்சத்தில் மக்கள் வங்கிகளில் சேமித்திருக்கும் பணத்தையும் மீளப்பெற்றுக்கொள்வார்கள்.

அரசாங்கத்தை உள்ளிருந்து விமர்சிப்பது அர்த்தமற்ற ஒன்றாகும். 20 ஆம் திருத்தத்திற்கு கைதூக்கும் வேளையில் ஏன் இவர்களுக்கு சிந்திக்க முடியாது போனது?

சீனாவின் பொறிக்குள் சிக்குண்டு நாடு நெருக்கடியை சந்திக்கும் என்ற காரணத்தால்தான் போர்ட் சிட்டி சட்ட மூலத்துக்கும் நாம் கைதூக்கவில்லை, 20 ஆம் திருத்தத்துக்கும் கைதூக்காமல் இருக்க காரணமும் இதுவே. இன்று அரசாங்கத்தில் இருந்துகொண்டு எதிர்க்கட்சியாக செயற்படமுடியாது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு சென்று பொய்களைக் கூறி வருகின்றார். இயற்கை உரம் திட்டத்துக்கு மாறியுள்ளதாகக் கூறி வருகின்றார்.

சர்வதேசத்துக்கு கொடுத்த எந்த வாக்குறுதியையும் அரச தலைவர்கள் நிறைவேற்றவில்லை. யுத்தம் முடிந்த பின்னர் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கொடுக்கிறேம் என முழு உலகத்துக்கும் வாக்குறுதி கொடுத்து உதவி களைப் பெற்றுக்கொண்டனர்.

ஆனால் கொடுத்த எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. அதனால் தான் இன்றும் எந்தவொரு நாடும் இலங்கைக்கு உதவிசெய்ய மறுத்து வருகின்றன. மேலும் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சகல மக்களுக்கும் ஒரே மாதிரி சட்டம் இயங்கும் என நாம் எதிர்பார்த்தால் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சட்டம் பின்பற்றப்படுகின்றது. அதுமட்டுமல்ல, இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் வேண்டாம் என்ற கொள்கையில் அரசாங்கம் இருகின்ற நிலையில், இந்த செயலணிகள் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதை நாம் கருத்திற் கொள்ளப்போவதில்லை.

இந்த ஆணைக்குழுவின் தலைவர் யார்? அவரது தகுதி என்ன? என்பதை புதிதாகக் கூற வேண்டியதில்லை.

இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் வேண்டாம் என்ற நிலையில் அரசாங்கம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது. ஜனநாயகம் பாதுகாப்பது, சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க மாட்டார் என்பதெல்லாம் எமக்குத் தெரியும்.

ஆனால் குற்றவாளிகளைக் கைது செய்வார், ஈஸ்டர் தாக்குதலில் குற்றவாளிகளைத் தண்டிப்பார் என நினைத்தோம். ஆனால் குற்றவாளிகளைக் கைது செய்யுங்கள் என வலியுறுத்தும் நபர்களையே கழுத்தைப் பிடிக்கின்றார். குற்றவாளிகளை கைது செய்வதாகவோ அல்லது நியாயத்தை நடைமுறைப்படுத்த அவர் நடவடிக்கை எடுக்கிறார் எனத் தெரியவில்லை.

தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சிறு சிறு தவறுகளை செய்தனர். அவர்கள் குற்றவாளிகள் என்றால் அவர்களுக்குத் தண்டனை வழங்கி விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு பிரச்சினைகளுக்கு அரசாங்கம் செவிமடுக்கவில்லை என்றால் – தீர்வு வழங்கவில்லை என்றால் – மக்கள் ராஜபக்ஷக்களையும், அரசாங்கத்தைப் பலப்படுத்தும் கட்சிகளையும், 20 ஆம் திருத்தத்துக்குக் கைதூக்கிய நபர்களையும் கழுத்தைப் பிடித்து வெளியில் வீசுவார்கள். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஒய்வூதியக் கொள்ளையின் வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெற்றதன் பின்னணி

## சஜித் கருத்து



அக்ரஹார காப்பீடு என்ற போர்வையில் ஓய்வூதியக்காரர்களின் சம்பளத்தில் ஒரு பகுதியை பறிமுதல் செய்ய அரசாங்கம் முயற்சிப்பதை கடந்த சனிக்கிழமை, தான் நாட்டுக்குவெளிப்படுத்தினேன் எனவும், அதன் பின்னர் 27/2 இன் கீழ் ஒரு கேள்வியை எழுப்ப கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நாடாளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்துக்கு அனுப்பப்பட்டதாகவும்,இதனால் பதற்றமடைந்த அரசாங்கம், அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை சில மணித்தியாலங்களின் பின்னர் வாபஸ் பெற்றதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒய்வூதியக்கார்களின் சம்பளத்தை பறிமுதல் செய்யும் முயற்சிக்கு எதிரான போராட்டம் பலனளிப்பதில் தான் மகிழ்ச்சியடைகிறேன் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், 27/2 இன் கீழ் உள்ளடக்கப்பட்டு இன்று வினவ, நேற்று அனுப்பப்பட்ட 'ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பளத்தை கொள்ளையடிப்பது தொடர்பான' என்ற கேள்வி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

# நாவலர் மணிமண்டபத்தில் இன்று இசை அர்ச்சனை

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கந்தசஷ்டி விரத புண்ணிய காலத்தில், ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத் தில், மாலை மூன்று தொடக்கம் நான்கு மணிவரை முருக பக்திப் பாடல்கள் இசை அர்ச்சனை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

அந்தவகையிலே, கந்தசஷ்டி நிறைவு நாளன்று, (இன்று வியாழக்கிழமை) கலாவித்தகர் திருமதி மா. அனந்தலட்சுமியோடு இணைந்து அவர் தம் மாணவி செல்வி தபோதினி நவஜீவன் ஆகியோரது 'திருப்புகழ் துதி' பக்தியிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்தப் பக்தியிசை நிகழ்வில் அணிசேர் கலைஞர்களாக, வயலின் – கலாவித்தகர் செல்வி ந.நிரஞ்சலாவும் மிருதங்கம் – கலாவித்தகர் செல்வன் ம.வினோகாந்தனும் முகர்சிங் – இ.இராஜேஸ்வரனும் நிகழ்த்தவுள்ளனர்.

# முன்னாள் எம்.பி. சிவசிதம்பரத்தின் 29 ஆம் ஆண்டு நினைவு வவுனியாவில்!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரத்தின் நினைவு தினம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் வவுனியா வைரப்புளியங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் விழாக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் ந.சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட தலைவர் கருணாநிதி, முன்னாள் நகர சபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார், வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மாலையிட்டு மலர் அஞ்சலி செலுத்தினார்கள். அத்துடன் அவரது செயற்பாடுகள் தொடர்பாகவும் கருத்துரைகளும் இடம் பெற்றன.





இதேவேளை, ஞாபகார்த்த சிலை அமைப்புக் குழுவினரதும் அதன் தலைவர் நா.சேனாதிராசா ஆகியோரதும் வேண்டுகோளுக்கிணங்க வவுனியாவின் மூத்த சட்டத்தரணி முருகேசு சிற்றப்பலம் அவர்களால் கடந்த 2015ஆண்டு 07 ஆம் மாதம் 25 ஆம் திகதி இந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளக்காடாக கிடக்கும் காட்டுக்கந்தோர் வீதி மக்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எம்.பிக்கள் சந்தித்தனர்



தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டத்தின் முறையற்ற வடிகாலமைப்பால் கச்சேரி காட்டுக்கந்தோர் வீதி வெள்ளத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

சில குடும்பங்கள் இடம்பெயர்ந்தும் உள்ளனர். அந்த இடத்தை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடியதோடு முறையற்ற வடிகாலமைப்பு தொடர்பாக கேள்வி எழுப்புவோம் எனவும் மக்களுக்கு தெரிவித்தார்கள்.

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்று 2 ஆவது டோஸ் தடுப்பூசி

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.11

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்தும் திட்டம் இன்று (வியாழக்கிழமை) முதல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாக உள்ளது. இது தொடர்ந்தும் 12 மற்றும் 15 ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் தடுப்பூசி செலுத்தப்படும் தினங்களில் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 1.00 வரை யாழ்ப்பான பல்கலைக்கழக சுகநல நிலையத்தில் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன.

ஒக்ரோபர் மாதம் சினோபோர்ம் முதலாவது டோஸ் தடுப்பூசியை பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர் களுக்கு மட்டுமே இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தடுப்பூசி ஏற்ற வரும்போது தடுப்பூசி அட்டை, தேசிய அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகியவற்றைக் கொண்டு வருமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கரைச்சி பிரதேச சபை பாதீடு நிறைவேற்றம்

கரைச்சி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 9 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் சபை அமர்வு கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நேற்று 10 மணியளவில் ஆரம்பமானது. சபை ஆரம்பித்ததும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருந்தார்.

விவாதங்களின் பின்னர் வாக்களிப்புக்கு விடப்பட்டது. 35 உறுப்பினர்கள் உள்ள சபையில் 34 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். ஆதரவாக 21 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன . ஒருவர் நடுநிலை வகித்திருந்தார். 9 மேலதிக வாக்குகளால் கரைச்சி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டது.

# அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை தொடர்பில் மட்டக்களப்பில் ஆராய்வு



மட்டக்களப்பு மாவட்டத்தில் சீரற்ற காலநிலை தொடர்பில் ஆராயும் விசேட அனர்த்த முகாமைத்துவ கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதன் காரணமாக மாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் வகையிலேயே இந்தக் கூட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந்த் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஏ.எம்.எஸ்.சியாட், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பாதுகாப்பு பிரதானிகள், பொலிஸ் உயரதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது மழையுடன் கூடிய காலநிலை ஆரம்பித்துள்ள நிலையில் அதன் காரணமாகப் பாதிப்புகள் ஏற்படும்போது அதனைத் தடுப்பது மற்றும் அனர்த்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக நீர்ப்பாசன திணைக்களம், விவசாய திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, உள்ளூராட்சி மன்றம், பிரதேச செயலகங்கள் இணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுப்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்காலத்தில் மழையுடன் கூடிய காலநிலை நிலவினால் அந்தச் சந்தர்ப்பத்தில் பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக அதிலும் குறிப்பாக மாவட்டத்தில் வெள்ளத்தால் அதிகமாகப் பாதிப்பிற்குள்ளாகும் கிரான், ஏறாவூர்ப் பற்று, மட்டக்களப்பு நகர், காத்தான்குடி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அனர்த்த முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டமையுடன், கடந்த காலங்களில் அனர்த்த வேளைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எவ்வாறான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பது தொடர்பான விவரங்கள் இதன்போது மாவட்ட அனர்த்த முகா மைத்துவ பிரிவால் காண்பிக்கப்பட்டிருந்தது.

கமநல சேவை திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் உடைப்பெடுக்கும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் மாவட்டத்தில் உள்ள பாரிய குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமையுடன், யானைகளால் மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு அனர்த்த வேளைகளில் முப்படையினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொதுமக்களின் உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும், காடுகள் மற்றும் சதுப்புநிலங்கள் மற்றும் வெள்ளம் வழிந்தோடும் பகுதிகள் தனிநபர்களால் நிரப்பப்படுவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அதேவேளை அனர்த்த காலங்களில் பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் அரிசி போன்றவற்றின் பொருள் கையிருப்பு போதுமானதாக உள்ளதா என்பது தொடர்பாக வாராந்த பொருளிருப்பு கணக்கெடுப்பை சதொச மற்றும் தனியார் நிறுவனங்களில் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரால் இதன்போது உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# யாழ். - மானிப்பாய் - பொன்னாலை வீதிப் புனரமைப்பில் நிதி மோசடி..?



## வலிகாம மக்கள் ஏமாளிகளா?

என்.பிருந்தாபன்

யாழ். மாவட்டத்தில் தற்போது பல வீதிகள் காபெற் வீதியாக புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதில் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்த யாழ்ப்பாணம் - மானிப்பாய் - பொன்னாலை வீதியும் புனரமைக்கப் படுகின்றது. நீண்டகாலம் தாம் எதிர்கொண்ட பிரச்சினைக் குத் தீர்வு கிடைத்துவிட்டது என மக்கள் மகிழ்ச்சியடைந் துள்ளனர். எனினும், வீதியின் புனரமைப்பு விதம் மக் களை கவலையடையச் செய்துள்ளது.

யாழ்ப்பாணம் சுடுகாட்டு ஆலடிச் சந்தியில் இருந்து மானிப்பாய் ஊடாக பொன்னாலைச் சந்தி வரை இந்த வீதி புனரமைக்கப்பட உள்ளது. அதாவது இந்த வீதி யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்கின்றது. அதேபோன்று, யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை, வலி.தென் மேற்கு, வலி.மேற்கு ஆகிய பிரதேச சபைகளும் இதில் அடங்குகின் றன.

வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆங் காங்கே ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றன. மானிப்பாய் சந்தியில் இருந்து சங்கானை வரை வேலைகள் துரித மாக நடைபெற்று வருகின்றன. சில இடங்களில் ஆரம்ப வேலைகள் முடிவ டைந்து காப்பெற்று இடும் பணி மட்டுமே எஞ்சியிருக்கின்றது.

ஆனால், மிகக் கவலையான விடயம் என்னவெ னில், இந்த வீதிப் புனரமைப்பின்போது வீதி அகலிக் கப்படவில்லை என்பதுடன் வீதியில் உள்ள மதகுகள் புனரமைக்கப்படாமல் அவற்றுக்கு மேலாக காப்பெற் வீதி அமைக்கப்படுகின்றது. ஏற்கனவே சேதமடைந்து அடுத்த சில வருடங்களிலேயே இடிந்து விழக்கூடிய அபாயம் உள்ள மதகுகளைக்கூடப் புனரமைக்காமல் அவற்றுக்கு மேலாக காப்பெற் இடும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

அருகில் இடம் இருக்கும் இடங்களில் மட்டும் வீதி அகலமாகவும் ஏனைய கடைத்தொகுதிகள், இதர கட்ட டங்கள் உள்ள இடங்களில் ஒடுக்கமாகவும் வீதி புனர மைக்கப்படுகின்றது. வீதியோரம் இடையூறாக நிற்கும் மரங்கள்கூட தறிக்கப்படவில்லை. ஏனைய இடங்களில் குறிப்பாக, பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, பருத்தித் துறை வீதி போன்றன புனரமைக்கப்பட்ட போது மக்கள் கட்டடங்களைப் பின்னகர்த்தி வீதிப் புனரமைப் பிற்கு இடமளிக்கவில்லை. இதனால் புனரமைப்பிற்கு தடை ஏற்பட்டது.

எனினும், தொடர்ச்சியாக மக்களுக்கும் வர்த்தகர்கள் மற்றும் இதர தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட்டதன் மூலம் அவர்கள் தமது கட்டடங்களைப் பின்னகர்த்தி இடமளித்தனர். இன்று குறித்த வீதிகள் போக்குவரத்துக்கு மிகச் சிறந்தவையாக மாற்றப்பட் டுள்ளன. ஆனால், இந்த வேலைத்திட்டம் யாழ்.மானிப் பாய் - பொன்னாலை வீதிப் புனரமைப்பின் ஆரம்பத்தில் இடம்பெற்றிருக்கவில்லை.

ஆனால், வீதியின் ஆரம்ப புனரமைப்பு இடம்பெற்று காப்பெற் இடுகின்ற வேலை நடைபெற்று வரும் நிலை யில் - தற்போது - வலி.தென்மேற்கு பிரதேச செயலகம் ஆங்காங்கே சில கூட்டங்களை நடத்தி மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. வலி. மேற்கு பிரதேச செயலகமும் இதற்கான சில கூட்டங் களை நடத்தியிருக்கின்றது.

மானிப்பாய் மற்றும் சங்கானை போன்றன எதிர் காலத்தில் நகர சபைகளாகத் தரம் உயர்த்தக்கூடிய நிலையை எட்டியுள்ளன. ஆனால், இந்த நகரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. சாதாரண நாள்களிலேயே இங்கு சனநெரிசல் அதிகமாக உள்ளது.





பண்டிகைக் காலங்களில் போக்குவரத்துச்செய்ய முடி யாமல் வாகன நெரிசல் அதிகமாக உள்ளது. இந்த விட யங்கள் தொடர்பாக வர்த்தகர்களும் மக்களும் விழிப் பூட்டப்படவேண்டும். குறிப்பாக, மானிப்பாய், சங்கானை வர்த்தக சங்கங்கள் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுக்கவேண்டும்.

இது ஒருபுறம் இருக்க, மதகுகள் புனரமைக்கப்ப டாமை தொடர்பாக உடனடியாக கரிசனை செலுத்தப்பட வேண்டும். வலி.தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பிரதானமான ஆறு மதகுகள் எந்தவித புனரமைப்பும் இன்றி அதற்கு மேலாக காப்பெற் இடப்படக்கூடிய நிலைக்கு புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன.



மானிப்பாய் - பொன் னாலை வீதியில் மானிப் பாய் சந்திக்கு சமீபமாக உள்ள மதகு, கட்டுடைச் சந்தியில் உள்ள மதகு மற்றும் சண்டிலிப்பாய் சந்திக்கு சமீபமாக ஐந்து கண் மதகுக்கு அருகே உள்ள இரு மதகுகள், மேலும் சண்டிலிப்பாய் - சங்கானை வீதியில் ஐயனார் சிலையடிக்குச் சமீபமாக இரு மதகுகள் என்பன எந்தவித புனரமைப்பும் செய்யப்படவில்லை. ஆறு மதகுகளும் பெருமளவில் சேதமடைந்த நிலையிலேயே உள்ளன. அடுத்துவரும் சில ஆண்டுகளில் மதகுகள் இடிந்துவிழக் கூடிய அபாயம் உள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பெரு வீதிகள் புனரமைப்பின்போது மதகுகளும் புன ரமைப்பிற்கு சேர்த்தே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது வழஷ்வயானது. யாழ்ப்பாணத்தில் காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்ட அத்தனை வீதிகளிலும் ஒரு மதகுகூட புனரமைக்கப்படாமல் விடப்படவில்லை.

ஆனால், மேற்படி வீதியில் உள்ள மதகுகளைப் புனரமைக்காமல் அதற்கு மேலாக காப்பெற் இடப்படும் செயற்பாடு இடம்பெறுவது மோசடியானது. இதுவரை இவ்வாறு ஆறு மதகுகள் புனரமைக்கப்படவில்லை. இதன்மூலம் மக்கள் வெளிப்படையாக ஏமாற்றப்பட்டு எங்கோ உயர் மட்டத்தில் பாரிய நிதி மோசடி இடம் பெறுகின்றதா என சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த விடயம் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் வலி.தென்மேற்கு பிரதேச சபையில் பேசுபொருளாக இருந்தது. கவனவீர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர். இதன்போது சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்ட வீதிப் புனரமைப்புடன் சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் நிலைமையை சமாளித்துவிட்டுச் சென்றனர்.

கிராமிய வீதிகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழேயே இந்த வீதி புனரமைக்கப்படுகின்றது எனவும் ஆறு மாதங்களுக்குள் இந்தத் திட்டத்தை முடிவுறுத்த வேண்டும் என்ப தால் இப்போது மதகுகளை அமைக்காமல் வேலைகள் முடிவடைந்த பின்னர் அமைத் துத் தருவோம் என அவர்கள் கூறினர். முதற்கட்டமாக அதற்குரிய சில பணிகளை இப்போதே தாம் முன்னெடுப்பார்கள் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

உயர் அதிகாரிகளின் இந்த உறுதி மொழிகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பதும் காலதாமதம் ஆகுமெனில் காலத்தை நீடிப்பதற்கும் பல வழிகள் உள்ளன. ஆனால், காலத் தைக் காரணம் காட்டி அரை குறை அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு இடமளிக்க முடியாது. யாழ். மாவட்டத்தில் உள்ள அரச தரப்பு அமைச்சர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஆகியோ ரும் இந்த விடயத்தில் அக்கறை இன்றி இருக்கின் றனர் என்றே தெரிகின்றது.

தினமும் அதிகமான மக்கள் பயணிக்கும் பெரு வீதி ஒன்றை அரைகுறையாகப் புனரமைப்பதற்கு அனுமதி க்க முடியாது. இந்த விடயத்தில் மக்களால் தெரிவுசெய்யப் பட்ட உள்ளூர் அரசியல்வாதிகளான பிரதேச சபை உறுப்பினர்கள் தற்துணிவுடன் செயற்பட வேண்டும். குறிப்பாக, வலி.தென் மேற்கு, வலி.மேற்கு ஆகிய பிர தேச சபைகள் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும்.

அபிவிருத்தி என்பது மக்களுக்கானதே அன்றி அதி காரிகளுக்கோ அரசியல்வாதிகளுக்கோ உரியதல்ல. எனவே, பாலங்கள், மதகுகள் அனைத்தையும் பூரணமா கக் கட்டி முடித்த பின்னர் வீதியை அமைக்குமாறு உயர் மட்டத்தினருக்கு மக்கள் இடித்துரைக்க வேண் டும். ஆயிரக்கணக்கான கல்விமான்கள் தினமும் சென்றுவரும் வீதியில், வெளிப்படையாக பெரும் மோசடி இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்தவில்லையா யின் அனைவரும் குற்றவாளிகளே!

காலைக்கதிர் Kalaikkathir

# காரைநகர் பிரதேச சபையையும் பறிகொடுத்துள்ளது கூட்டமைப்பு

## ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் சுயேச்சைக் குழு ஆட்சி



(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ். நிதர்ஷன்)

யாழ்., காரைநகர் பிரதேச சபையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று பறிகொடுக்க ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் சுயேச்சைக் குழு கைப்பற்றியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்குள் இருந்த காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கடந்த மாதம் 21ஆம் திகதி கொரோனாத் தொற்றால் உயிரிழந்தமையையடுத்து தவிசாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

இந்நிலையில், காரைநகர் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

குறித்த அமர்வின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் காரை நகர் பிரதேச சபை உப தவிசாளர் பாலச் சந்திரன் போட்டியிட இருந்த போதிலும் அவருக்கு ஏனைய கட்சிகள் ஆதரவு அளிக்காத நிலையில் சுயேச்சைக் குழு வைச் சேர்ந்த அப்புத்துரை தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்டு ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் வெற்றியீட்டியுள்ளார்.

நேற்றைய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்ததோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நடுநிலை வகித்துள்ளனர்.

காரைநகர் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்சார்பில்மூன்றுஉறுப்பினர்களும், சுயேச்சைக் குழுவில் மூன்று உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியில் இரண்டு உறுப்பினர்களும், ஈ.பி.டி.பியில் இருவரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் ஒருவரும் உள்ள நிலையில் ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் சுயேச்சைக் குழுவானது தவிசாளர் பதவியைக் கைப்பற்றியுள்ளது.

# வெள்ளத்தில் சிக்கித் தவித்த 288 பேர் மீட்பு!



இலங்கையில் கடந்த இரு நாள்களாக பெய்து வந்த மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ள அனர்த்தத்தில் பாதிக் கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளில் கடற் படையினர் மும்முரமாக ஈடுபட்டு வரு கின்றனர்.

இதன்படி, கடந்த 48 மணி நேரத்தில் அதாவது கடந்த திங்கள் முதல் நேற்று 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 288 பேர் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட பொது மக்கள், பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்கான உடனடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

களுத்துறையின் பரகொட, இரத்தின புரி புதிய நகரம், காலியின் உடமலத்த, பாலவிய வணாத் தவில்லு, எலுவன் குளம், மன்னார் வீதி, கல்பிட்டி, உடுபத்தாவ, தாரவில்லுவ, கொடதெனியாவ, புத்தளம், குருநாகல் ஆகிய இடங்களில் இந்த மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

10 ஆயிரத்து 188 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 823 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்து பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் ஒரு வீடு முழுமையாகவும், 110 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு தற்போது 6 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 96 குடும்பங்களைச் சேர்ந்த 308 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

## சீரற்ற காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

12 ஆயிரத்து 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பிரதேசங்களில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட அனர்த்தங்கள் காரணமாக தமது வசிப்பிடங்களில் 3 ஆயிரத்து 648 குடும்பங்கள் வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு வெளியேறிய குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 476 பேர், 76 நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், குடியிருப்புகளிலிருந்து இடம்பெயர்ந்த 10 ஆயிரத்து 23 குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 690 பேர் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை, குறித்த அனர்த்தங்களால் 1,229 வீடுகள் பகுதியளவிலும், 23 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வடக்கு -கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டமிட்ட சிங்களமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று வடக்கு - கிழக்கு ஆயர் மன்றத்தினர், சுவிஸ்ட்லாந்து தூதுவரிடம் வலியுறுத்தினர்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் பணியாற்றி வரும் ஆயர்களுக்கும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸட்லாந்தின் தூதுவர் டொமினிக் பார்க்லர் மற்றும் அவரின் குழுவினரும் இடையிலான சந்திப்பு யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று மதியம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தற்போது நிலவிவரும் அரசியல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் பற்றிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது ஆயர்கள் இங்கு நிலவிவரும் தற்போதைய நெருக்கடி நிலமைகளை எடுத்துக்கூறினர்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் அபி விருத்திப்பணிகளில் அரசு அசமந்தப்போக்குடன் செயற்பட்டு வருவதையும், இப்பிரதேசங்களில் இந்திய அரசு முன்னெடுக்க முனையும் பணிகளுக்கு தடைகளை ஏற்படுத்தி அந்த அபிவிருத்திப்பணிகளை தென்பகுதியில் முன்னெடுக்க முயற்சிப் பதையும் ஆயர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மறைமுகமாகவும் நேரடியாகவும் அரசு முன்னெடுத்து வரும் சிங்களமயமாக்கல் செயற்திட்டங்களை அவர்கள் விபரித்ததோடு, தமிழ் மக்கள், இலங்கை அரசின் மீது கொண்டுள்ள அதிருப்தியையும் எடுத்துரைத்தனர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்கு ஆயர் மன்றத்தினர் சார்பில் யாழ் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ, திருகோணமலை ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகை ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆசிரியரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தரப்புக்கும் ஆசிரியர் சங்கங்களின் தலைவர்களுக்கும் இடையே நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 12ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படும்போது இது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட எதிர்பார்ப்பதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் உடனடியாக தீர்க்கப்படும் என பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோர் எமக்கு உறுதியளித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இந்த விடயம் இடம்பெற்றுள்ளது எனவும், ஜனவரி மாதத்துக்குள் முரண்பாடுகள் அதற்கேற்ப சரிசெய்யப்படும் எனவும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதிப்படுத்தினார் - என்றார்.

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)





விளையாட்டுத்திடல் நாளை காலை 9 மணிக்கத் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரித்தானியக் கிளையின் பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட விளையாட்டுத்திடல் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போது திறப்பு விழா பற்றிய விடயங்களும் மைதானத்தில் உள்ள விசேட அம்சங்களும் தெளிவுபடுத்தப்பட்டன.

இலத்திரனியல் ஸ்கோர்போட், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், பயிற்சிகளுக்கான இடம், மைதான பராமரிப்பு போன்ற வசதிகளுடன் 55 மில்லியன் ரூபா செலவில் இந்த நவீன விளையாட்டுத்திடல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டுத்திடலானது வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளிலேயே மிகவும் நவீனகரமான ஒரு மைதானமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய மைதானத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி மோதும் 19 வயதுக்குட்பட்டோருக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளது.